

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை யொட்டி குன்றத்தூர் நகர தி.மு.க மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.மோகன் தலைமையில் இறகு பந்து போட்டி நடைபெற்றது. இப்போட்டியை காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் – முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடங்கி வைத்தார். அருகில் குன்றத்தூர் நகர மன்றத் தலைவர் கோ.சத்தியமூர்த்தி, பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயக்குமார், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு, துணை அமைப்பாளர் கலாநிதி குணாளன், என்.குணசேகர், என்.கருணாநிதி, ஆர்.கே.அபிபுன்னிசா, க.வே.சிதம்பரம் மற்றும் நகர மாணவர் அணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளையொட்டி சேலம் மத்திய மாவட்ட தி .மு.க. சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக இன்றும் சேலம் மாநகர தி.மு.க. இளைஞரணி சார்பில் ஜான்சன் பேட்டையில் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சிக்கு மாநகர இளைஞரணி அமைப்பாளர் கேபிள் சரவணன் முன்னிலை வகித்தார். இதில் சிறப்பு அழைப்பாளராக மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளரும், முன்னாள் சுற்றுலாத்துறை அமைச்சருமான ஆர் ராஜேந்திரன் தலைமை தாங்கி தூய்மை பணியாளர்கள் 200 பேருக்கு பேண்ட் ,சட்டை மற்றும் சேலைகளை வழங்கினார்.

### மறைந்த இயக்குநர் பாக்யராஜ் உடலுக்கு இறுதிச்சடங்குகள்!

# பெசன்ட் நகர் மின் மயானத்தில் உடல் அரசு மரியாதையுடன் தகனம்!



## 72 துப்பாக்கிக் குண்டுகள் முழங்க இறுதி மரியாதை!

சென்னை, ஜூன். 29-

மறைந்த தமிழ் திரைப்பட இயக்குநரும் நடிகருமான கே. பாக்யராஜின் உடல் . 72 துப்பாக்கிக் குண்டுகள் முழங்க அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது. இறுதிச் சடங்கில் ஏராளமானோர் பங்கேற்று கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

நடிகரும், இயக்குநருமான பாக்யராஜ் உடல் நலக்குறைவு காரணமாக, சென்னையில் நேற்று காலமானார். நுங்கம்பாக்கத்தில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், எதிர்க் கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

பாக்யராஜின் உடலுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள், நடிகர். நடிகைகள் உள்ளிட்ட திரைத்துறையினரும் அஞ்சலி செலுத்தினர். இதைத்தொடர்ந்து, சென்னை நுங்கம்பாக்கம் இல்லத்திலிருந்து நேற்று காலை பாக்யராஜின் உடல் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது. பெசன்ட் நகர் மின் மயானத்தில், குடும்பத்தினர் மற்றும் திரையுலகப் பிரபலங்கள் முன்னிலையில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன. அதன்பின், தமிழ்நாடு அரசின் சார்பில் 72 துப்பாக்கிக் குண்டுகள் முழங்க, அரசு மரியாதையுடன் பாக்யராஜின் உடல் தகனம் செய்யப்பட்டது. இறுதிச் சடங்கில் ஏராளமானோர் பங்கேற்று கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

# செஞ்சியில் மொஹரம் பண்டிகையை முன்னிட்டு 3000 பேருக்கு பொது விருந்து!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

செஞ்சி ஜூன் 29-

செஞ்சியில் மொஹரம் பண்டிகை முன்னிட்டு 3000 பேருக்கு பொது விருந்து வழங்கும் நிகழ்ச்சியை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தேசூர் பாட்டையில் அமைந்துள்ள மஸ்ஜித்தே ஃபத்தா பள்ளிவாசலில் மொஹரம்பண்டிகை முன்னிட்டு ஜியாபாத் என்னும் பொது விருந்து காலையில் நடைபெற்றது.

இதை முன்னிட்டு நடைபெற்ற சிறப்புத் தொழுகையில்விழுப்புரம் வடக்கு மாவட்டபொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டார்.

தொடர்ந்து பள்ளிவாசல் தலைவர்கள் கஃபாரியன், ஆதில் பாஷா, கவுஸ் பாஷா ,சிராஜ், ஜானி பாஷா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற பொது விருந்தினை விழுப்புரம் வடக்குமாவட்ட பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர்செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்.

பொதுவிருந்து நிகழ்ச்சியில் 3000த்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர்

இதில் பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், முன்னால் நகர செயலாளர் காஜா நஜீர், சையத் இக்பால், மாவட்டபொறியாளர் அணி துணை அமைப்பாளர்ரசூல் பாஷா, தொண்டரணி பாஷா, வழக்கறிஞர்கள் முஸ்தாபா, ரசூல், சதாம், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் சரத்குமார் பொது வெளியில் போதைப் பொருள் உபயோகிப்பதை கண்டித்து

# விழுப்புரம் மத்திய மாவட்ட மாணவரணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. கண்டன உரை!

விழுப்புரம், ஜூன். 29-

தமிழக வெற்றிக் கழக அமைச்சர் சரத்குமார் அவர்கள் பொதுவெளியில் போதை பொருள் உபயோகப்படுத்தியதை கண்டித்து, விழுப்புரம் மத்திய மாவட்ட மாணவர் அணி சார்பில், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பா:ரீ.வினோத் அவர்கள் தலைமையில் விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகில், நகராட்சி திடலில் இன்று காலை 10.30 மணி அளவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்ட மன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் அவர்கள் கலந்து கொண்டு கண்டன உரையாற்றுகிறார். இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகி கள் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக மாணவர் அணி, இளைஞர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள் வெல்லும் தமிழ் பெண்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், தொமுச நிர்வாகிகள், மற்றும் சார்பு அணி நிர்வாகி கள், மாணவர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு கண்டன முழக்கமிட்டனர்.

# ஆவடி சாலையில் வைக்கப்பட்ட பேனர்களால் போக்குவரத்து பாதிப்பு!

ஆவடி, ஜூன் 29–

முதல்வர் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு கடந்த வாரம் முழுவதும் ஆவடி மாநகராட்சி பகுதியான ஆவடி எம்எல்ஏ அலுவலகம், பட்டாபிராம், திருமுல்லைவாயல் பகுதியில் உள்ள சாலையோரங்களில், விதிமீறி விளம்பர பதாகை, விளம்பர தட்டிகள், பேனர்கள் மற்றும் போஸ்டர்கள் வைப்பதாக தொடர்ந்து குற்றச்சாட்டு எழுந்தது.

இதனால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக பொது மக்கள் புகார் கூறினர். மாநகராட்சி கமிஷனர் சரண்யா உத்தரவின் படி, நேற்று காலை முதல் மாலை வரை, திரு முல்லைவாயில், சி.டி. எச்.சாலையில் விதிமீறி வைக்கப்பட்ட பேனர்கள் அகற்றப்பட்டன. இதில், மின் கம்பங்களில் வைக்கப்பட்ட 30 விளம்பர தட்டிகள், 15 பெரிய மற்றும் சிறிய பேனர்களை ஆவடி போக்குவரத்து போலீசார் உதவியுடன் அப்புறப்படுத்தினர்.

மேலும் ஆளுங்கட்சி என்பதால் பொதுமக்களுக்கு இடையூறாக சட்டத்திற்கு புறம்பான அனைத்து இடங்களிலும், பொது இடங்களிலும் சாலை சென்டர் மீடியனில் பேனர்கள் போஸ்டர்கள் அத்துமீறி விஜய் கட்சியினர் ஒட்டி வருகின்றனர். இதனால் பொதுமக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த பணி தொடர்ந்து நடைபெறும் என மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.




தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2–ல் போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம்களுக்கு மண்டலத் தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை நேரில் சென்று முகாம்களை துவக்கி வைத்து குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கினார். மாமன்ற உறுப்பினர் கலைச்செல்வி வெங்கடேசன் கீதா நாகராஜ் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன் வட்ட கழகச் செயலாளர்கள் பி. வெங்கடேசன் ஆர்.கே. நாகராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.

# ராணுவ வீரர் சுடலைமணி வீர மரணம்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. நேரில் அஞ்சலி!

தூத்துக்குடி,ஜூன்.29-

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கே.பி.தளவாய் புரம் கிராமத்தைச் சேர்ந்த இராணுவ வீரர் சுடலை மணி அவர்கள் அஸ்ஸாம் மாநிலத்தில் வீர மரணம் அடைந்துள்ளார். அவரது உடல் 27/06/2026 சனிக்கிழமை தூத்துக்குடி மாவட்டம், கூட்டுடகாடு கிராமத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.



இந்நிலையில், திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி நேரில் சென்று அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான அனிதா ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ., தூத்துக்குடி மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி ஆகியோர் உடனிருந்தனர்.

அஸ்ஸாம் மாநிலத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போது, வீரர் சுடலைமணி வீர மரணமடைந்தார். இவரின் மறைவுச் செய்தி மேலக்கூட்டுடன்காடு மற்றும் தளவாய்புரம் பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. வீர மரணமடைந்த சுடலைமணியின் உடலை விமானம் மூலம் சொந்த ஊருக்குக் கொண்டு வரப்பட்டது. அவரின் உடல் ராணுவ மரியாதையுடன் இறுதிச்சடங்கு நடைபெற்றது.

### நெல்லையில் - காதர் ஒலி ஏற்பாட்டில் – முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

# 10, 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பரிசுகள்!

## முகமது அலி தலைமையில் டி.பி.எம்.மைதீன்கான் – சு.சுப்பிரமணி வழங்கினர்!

நெல்லை.ஜூன்.29-

நெல்லை மத்திய மாவட்டம் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் காதர் ஒலி ஏற்பாட்டில் பேட்டை மல்லிமால் தெருவில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர், மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கும் நிகழ்வு மாவட்ட பிரதிநிதி முகம்மது அலி தலைமையில் மாவட்ட அவை தலைவர் வி.கே.முருகன், நெல்லை கிழக்கு பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர் மாநில சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு தலைவர் டி.பி.எம் மைதீன் கான், நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் ஆகியோர் பங்கேற்று 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர், மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கினர்.


நிகழ்வில் மாநகர பிரதிநிதி காஜா, மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு துணை அமைப்பாளர் ராஜகனி, வெங்கடேஷ்,நெல்லை பேட்டை பகுதி தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் ராமலெட்சுமி,நெல்லை மாநகர விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஷெட்டி,மூத்த முன்னோடி டேவிட்,மானூர் தெற்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் கொண்டாநகரம் கார்த்திக்,மகளிர் அணி சைபுநிஷா, நிர்வாகிகள் பெரோஸ்கான், செல்வ பெருமாள், பால்ராஜ், சுதாகர், தலைமை கழக பேச்சாளர்கள் மைக் மணி, நெல்லை ரவி, பிரிட்டோ அலெக்சாண்டர், மாநகர அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் டைட்டஸ் கண்ணன்,நைனா முகமது, மாரியப்பன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஷேக்தாவுது நன்றி உரையாற்றினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ந.உ. சிவசாமி**

**ஜூன் 29 (2023)**



இளமைக் காலம் முதலே கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

மாவட்ட பிரதிநிதியாகவும் – முப்பது ஆண்டுகள் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் – பத்தாண்டுகள் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்து முத்துப்பேட்டை பகுதியில் கழகம் வளர்த்தவர்.

ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர், மாவட்ட வேளாண்மை விற்பனை குழு உறுப்பினர், பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர், எடையூர் சங்கந்தி கூட்டுறவு சங்க தலைவர் என பல்வேறு அமைப்புகளில் பொறுப்பு வகித்தவர். பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**